# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இந்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழப் பரீட்சை – 2026

2025 ஆம் ஆண்டுக்குரிய அறநெறிப் பாடசாலை இறுதிச்சான்றிதழ்ப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற நிலையங்களில் பரீட்சை 2026 ஒக்டோபர் மாதம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தரப்படுகிறது.

**02. பரீட்சை நிலையங்கள் :**

உப அட்டவணை - 01 இல் காட்டப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், ஏதேனும் ஒரு நகரத்திற்காக போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கையளவில் விண்ணப்பிக்காத சந்தர்ப்பங்களில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, குறித்த விண்ணப்பதாரிகளை அதற்கு அருகாமையில் அமைந்துள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

**03 மொழிமூலம் :**

இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

**04 தகைமைகள் :**

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழே குறிப்பிடப்படும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.1 இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நடாத்தப்படும் அறநெறிப்பாடசாலையில் தரம் 10 சித்தி பெற்று இறுதிச் சான்றிதழ் பத்திர வகுப்பில் முழுமையாகவோ பகுதியளவிலோ கற்கையைப் பூர்த்தி செய்திருத்தல்.

4.2 கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரண)ப் பரீட்சையில் இந்து சமயப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

**05. விண்ணப்பித்தல் :**

**5.1** இந்து சமயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைக்கு தபால் மூலம் அவசியமான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல் படிவங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எமது www.doenets.lk இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**5.2** உமது அறநெறிப் பாடசாலை விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பிக்கும் புதிய அறநெறிப் பாடசாலை ஆயின் இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

**5.3** யாரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும் பந்தி 4 இல் காணப்படும் தகைமைகள் பெற்றுள்ள யாரேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்துக்கு அருகாமையில்

உள்ள அறநெறிப் பாடசாலை மூலம் ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தலகள் அனைத்தும் அறநெறிப்பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.4 உரிய அறநெறிப் பாடசாலை மூலம் முன்வைக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப் படிவத்தினை இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப் பிரதினை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அதேவேளை இரண்டாம் பிரதியினை அறநெறிப் பாடசாலை அதிபர் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இரண்டிலும் அறநெறிப் பாடசாலை அதிபரினால் கையொப்பம் இடப்பட்டு பதவி முத்திரை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5.5 விஷேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பதாரராயின் அது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டியதோடு அது தொடர்பான மருத்துவ சான்றிதழ்களினது பிரதிகளுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.6 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2026.07.24 ஆம் திகதி ஆரம்பமாகி 2026.08.24 ஆம் திகதி முடிவடையும்.

5.7 விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பதாரர்களின் பெயர்களை எழுதும் போது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே எழுதப்படல் வேண்டும். மேலும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் கட்டாயமாக குறிப்பிடல்படல் வேண்டும். பெறுபேறு வழங்கப்பட்ட பின்னர் பெயர் திருத்தங்களுக்காக கோரிக்கையின் போது அச்சுப்பிழை தவிர்ந்த வேறு எந்தவித கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும் பிழையின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் இறுதித்தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் எந்தவித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.8 பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தாம் வழங்கிய தகவல்கள் சரியானவைதானா என்பதனை தாமாக பரிசீலனை செய்த பின்பே கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறும் வரை சகல பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டையின் பிரதிகளையும் அறநெறிப் பாடசாலை தலைமையாசிரியர் தம்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

5.9 **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் தொடர்பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர்பாகவும், விண்ணப்படிவத்தை உறுதிப்படுத்தும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் உறுதிப்படுத்த அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.**

5.10 **இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலையின் பதிவு இலக்கம், மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு, அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத் தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளத்தக்க தொலைபேசி இலக்கமொன்றும் குறிப்பிடப்பட வேண்டும்.**

5.11 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் அனுப்பபடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘இந்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை’’ என்பதையும் பரீட்சைக்கு தோற்றும் நகரத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு / அதற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் தொலைதல் அல்லது காணாமல் போதல் மற்றும் தாமதமாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பாக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்படும் இறுதித்தினம் வரை தாமதப்படுத்துவதற்கான அனைத்துப் பொறுப்பினையும் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் பொறுப்பேற்க வேண்டும்.

**06. பரீட்சைக் கட்டணம் :**

இப் பரீட்சைக்குகரிய கட்டணம் ரூபா 200/- ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப்பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். நூன சித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா 50/- ஆகும்.

**6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :**

அறநெறிப்பாடசாலை அதிபர்கள் உரிய பரீட்சார்த்திகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமளிக்கலாம்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்பதாரிகள் (தமது அறநெறிப்பாடசாலை அதிபரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீளப்பெறவோ இயலாததாகும்.

**07. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை:**

சகல பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்பட்ட அறநெறிப்பாடசாலை அதிபர்கள் / பொறுப்பாசிரியர்களுக்கு வழங்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தனது கையொப்பம் சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத போது அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போது அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப்பாடசாலை அதிபர் அல்லது கிராமசேவையாளர் மூலம் குறித்த விண்ணப்பதாரியினுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதிஅட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் இவ்விடயத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய எல்லா சந்தர்ப்பத்திலும் கீழ்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பரீட்சையின் பெயர்:
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்
3. அறநெறிப் பாடசாலையின் பாடசாலை இலக்கம் (கணனி இலக்கம்)
4. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
5. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் / நகரம்:
6. விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம்

7. விண்ணப்பபடிவம் தபாலில் அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டு
8. பரீட்சைக் கட்டணத்தின் செலுத்தியிருப்பின் அப்பற்றுச்சீட்டின் பிரதி

## 08. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியான கடவுச்சீட்டு
- செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் எதுவுமின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அங்ஙனம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியே செல்லும்வரை பரீட்சை மேற்பார்வையாளர் பரீட்சார்த்தியை அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைப்பதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**09.** பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிடும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்படும் தண்டனைகளுக்கு அவர் ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

## 10. சித்தி பெற்றமையை தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடலும்:

இந்தப் பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தி பெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தி பெற்றதாகக் கருதப்படுவர். ஒரே தடவையில் நான்கு பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூனசித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்துவரும் இரண்டு வருட பரீட்சைகளுக்குள் நூனசித்தி பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்று நூன சித்தியைப் பூரணப்படுத்த வேண்டும். நூனசித்தி பெற்ற மாணவர்கள் நூனசித்தியைப் பூரணப்படுத்துவதற்காக கட்டாயமாக நூனசித்தி பெற்ற பாடத்தை மாத்திரமே தோற்ற வேண்டும்.

**10.1**

| புள்ளிகளின் வீச்சு | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமை சித்தி | C |
| 70-100 | உயர் திறமை சித்தி | D |

**10.2** விண்ணப்பதாரிகளின் பரீட்சை பெறுபேறுகள் உரிய இந்து அறநெறிப்பாடசாலை அதிபர் / பொறுப்பாசிரியருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**10.3** பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கருதப்படும்.

**11. சான்றிதழ் :**

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றபோதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி ஒருவர், அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**நிறுவனம் சார் பெறுபேறுகள் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**

எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்து விபரத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**12. விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

அறநெறிப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடுவதனால், அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாளை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது

**13. பாடத்திட்டம்** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு நடாத்தப்பட இருக்கும் இந்த அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள உப அட்டவணை இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**14.** இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருக்கும் அதேவேளை, இந்நிபந்தனைகளிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை , பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

**15.** தமிழ்மொழி மூலம் மாத்திரமே அறிவுத்தல்கள் வெளியிட்ப்படும் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

2026 ஜீலை மாதம் 24ம் திகதி
பத்தரமுல்லை. பெலவத்த,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

**உப அட்டவணை - 01**

பரீட்சை நகரங்களும் நகர இலக்கங்களும்

| **கொழும்பு மாவட்டம் - 01** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மருதானை | 0101 |
| பம்பலப்பட்டி | 0102 |
| நுகேகொடை | 0103 |
| அவிசாவளை | 0104 |

| **கம்பஹா மாவட்டம் - 02** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

| **களுத்துறை மாவட்டம் - 03** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| களுத்துறை | 0301 |
| பாணந்துறை | 0302 |

| **கண்டி மாவட்டம் - 04** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கண்டி | 0401 |
| புசல்லாவ | 0402 |
| கலஹா | 0403 |
| கம்பளை | 0404 |
| நாவலப்பிட்டி | 0405 |

| **மாத்தளை மாவட்டம் - 05** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மாத்தளை | 0501 |
| இரத்தோட்டை | 0502 |

| **நுவரெலியா மாவட்டம் - 06** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| நுவரெலியா | 0601 |
| ஹற்றன் | 0602 |
| தலவாக்கலை | 0603 |
| மஸ்கெலியா | 0604 |

| **காலி மாவட்டம் - 07** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| காலி | 0701 |

| **மாத்தறை மாவட்டம் - 08** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மாத்தறை | 0801 |
| தெனியாய | 0802 |

| **ஹம்பாந்தோட்டை மாவட்டம் - 09** | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| ஹம்பாந்தோட்டை | 0901 |

| யாழ்ப்பாணம் மாவட்டம் - 10 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| யாழ்ப்பாணம் | 1001 |
| சாவகச்சேரி | 1002 |
| பருத்தித்துறை | 1003 |
| வேலணை | 1004 |
| நெடுந்தீவு | 1005 |

| மன்னார் மாவட்டம் - 11 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மன்னார் | 1101 |

| வவுனியா மாவட்டம் - 12 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| வவுனியா | 1201 |
| செட்டிக்குளம் | 1202 |

| முல்லைத்தீவு மாவட்டம் - 13 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| முல்லைத்தீவு | 1301 |
| புதுக்குடியிருப்பு | 1302 |
| ஓட்டுசுட்டான் | 1303 |

| கிளிநொச்சி மாவட்டம் - 14 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கிளிநொச்சி | 1401 |
| பூநகரி | 1402 |
| முழங்காவில் | 1403 |
| பளை | 1404 |

| மட்டக்களப்பு மாவட்டம் - 15 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மட்டக்களப்பு | 1501 |
| களுவாஞ்சிக்குடி | 1502 |
| வாழைச்சேனை | 1503 |
| செங்கலடி | 1504 |

| அம்பாறை மாவட்டம் - 16 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| அம்பாறை | 1601 |
| அக்கரைப்பற்று | 1602 |
| கல்முனை | 1603 |
| திருக்கோவில் | 1604 |
| பொத்துவில் | 1605 |
| சம்மாந்துறை | 1606 |

| திருகோணமலை மாவட்டம் - 17 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| திருகோணமலை | 1701 |
| மூதூர் | 1702 |
| வெருகல் | 1703 |

| குருநாகல் மாவட்டம் - 18 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| குருநாகல் | 1801 |

| புத்தளம் மாவட்டம் - 19 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| புத்தளம் | 1901 |
| சிலாபம் | 1902 |

| அநுராதபுரம் மாவட்டம் - 20 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| அநுராதபுரம் | 2001 |

| பொலன்னறுவை மாவட்டம் - 21 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| பொலன்னறுவை | 2101 |

| பதுளை மாவட்டம் - 22 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| பதுளை | 2201 |
| வெலிமடை | 2202 |
| பண்டாரவளை | 2203 |
| அப்புத்தளை | 2204 |
| பசறை | 2205 |

| மொனராகலை மாவட்டம் - 23 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| மொனராகலை | 2301 |
| பிபிலை | 2302 |

| இரத்தினபுரி மாவட்டம் - 24 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| இரத்தினபுரி | 2401 |
| கஹவத்தை | 2402 |
| பலாங்கொடை | 2403 |
| இறக்குவானை | 2404 |

| கேகாலை மாவட்டம் - 25 | |
|---|---|
| நகரம் | நகர எண் |
| கேகாலை | 2501 |
| யட்டியாந்தோட்டை | 2502 |
| வரக்காப்பொல | 2503 |

உப அட்டவணை - 02

## அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை
## இந்துசமய பாடத்திட்டம்

இப்பரீட்சையானது 3 (மூன்று) மணித்தியாலங்கள் கொண்ட 4 (நான்கு) வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது

01. சமய வரலாறு
02. சமய மெய்யியல்
03. சமய இலக்கியம்
04. சமய வாழ்வியல்

### 01. சமய வரலாறு

1.0 இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு
- 1.1 சிந்துவெளி நாகரீகம்
- 1.2 சனாதன தர்மம்
- 1.3 வேதகாலம்
  - 1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்
- 1.4 இதிகாசங்கள்
  - 1.4.1 வகை
  - 1.4.2 தோன்றக் காரணம்
  - 1.4.3 பகவத் கீதை
- 1.5 புராணங்கள்
  - 1.5.1 பதினென் புராணவகை தோன்றக் காரணம்
- 1.6 தருமசாத்திரங்கள்

2.0 சைவசமய வரலாறு
- 2.1 சைவ சமயத்தின் தொன்மை
- 2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
- 2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3.0 தமிழகத்துச் சைவசமய வரலாறு
- 3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
- 3.2 பக்திநெறி
  - 3.2.1 காரைக்காலம்மையார்
  - 3.2.2 சமயகுரவர் நால்வர்
  - 3.2.3 ஆலயங்களும், வழிபாடும்
- 3.3 சாத்திரங்களும் தோத்திரங்களும்
  - 3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
  - 3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தம் தொகுப்பு
  - 3.3.3 சந்தான குரவர் நால்வர்
  - 3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
  - 3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்
- 3.4 சைவ நிறுவனங்கள்: மடங்களும் ஆதீனங்களும்
- 3.5 ஞானியர் வரலாறு: திருமூலர்

4.0 இலங்கையில் சைவம்
- 4.1 தொன்மை
- 4.2 புராதன ஆலயங்கள் (சிறப்பாக)

திருக்கேதீச்சரம்
திருக்கோணேஸ்வரம்
முன்னேச்சரம்
நகுலேஸ்வரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5.0 இலங்கையில் சைவ மறுமலர்ச்சி
- 5.1 பெரியார்கள்
  - 5.1.1 ஆறுமுகநாவலர்
  - 5.1.2 விபுலானந்தர்
- 5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
- 5.3 ஞானியர்

## 02. சமய மெய்யியல்

1.0 வேதங்கள்
- 1.1 பல தெய்வக் கோட்பாடு
- 1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
- 1.3 வேதப் பிரிவுகள்

2.0 உபநிடதங்கள்
- 2.1 மகாவாக்கியங்கள்
- 2.2 அறக்கோட்பாடு

3.0 பகவத்கீதை
- 3.1 நால்வகை யோகம்

4.0 மூவகை வேதாந்தங்கள்
- 4.1 அத்துவைதம்
- 4.2 விசிட்டாத்வைதம்
- 4.3 துவைதம்
  (இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5.0 சைவ சித்தாந்தம்
- 5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
- 5.2 சற்கரிய வாதம்
- 5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
- 5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
- 5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
- 5.6 சிவசின்னங்கள்
- 5.7 தீட்சை

6.0 திருவருட்பயன்-10 அதிகாரம்

## 03. சமய இலக்கியம்

1.0 திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

- 1.1 திருஞானசமபந்தர் தேவாரம்

(அ) “வேயுறு தோளி பங்கன்.........”
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) “மாதர் பிறை கண்ணியானை.........”
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
“நத்தார் படை.........”
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) “அற்புதத் தெய்வம்.........”
(ஆ) “கற்றவர் விழுங்கும்.........”

1.6 திருப்பல்லாண்டு
(அ) “சீரும் திருவம் பொலிய.........”
(ஆ) “ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்.........”
(இ) “மிண்டு மனத்தவர்.........”

1.7 திருப்புராணம்
(அ) “ஐந்து பேரறிவும்.........”
(ஆ) “தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன்.........”
(இ)) “அண்ணலார் தமக்கீடு.........”

1.8 திருமந்திரம்
(அ) “அன்பும் சிவமும் .........”
(ஆ) “உள்ளம் பெருங்கோயில் .........”
(இ) “யாவர்க்குமாம் .........”

1.9 இரண்டாம் திருமுறை
மூத்தநாயனார் திருவீரட்டை மணிமாலை - கபிலதேவ நாயனார்
“திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற் .........”

காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி
“கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும் .........”

2.0 ஏனைய தோத்திரப் பாடல்கள்

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) “எதிரிலாத பக்தி.........”
(ஆ) “பக்தியால் யானுனை.........”

2.2 அபிராமி அந்தாதி - அபிராமிப்பட்டர்
(அ) “நின்றும் இருந்தும் கிடந்தும்.........”
(ஆ) “சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி.........”
(இ) “கண் களிக்கும்படி கண்டு கொண்டேன்.........”

2.3 பராபரக்கண்ணி - தாயுமானவர்
(அ) “கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க.........”
(ஆ) “மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு..........”
(இ) “விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும்.........”

(ஈ) “சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும்.........”
(உ) “எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே.........”

3.0 திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை - ஆண்டாள்
(அ) “மாரிமழை முழைஞ்சல் முன்னி கிடத்துறங்கும்.........”
(ஆ) “அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி.........”
(இ) “மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்.........”

4.0 கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) - பாடல் ஒன்று முதல் இருபது வரை

5.0 பெரியபுராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6.0 திருவிளையடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7.0 நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்
(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல்வாழ்க்கை - 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை - 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை - 14 ஆம் அதிகாரம்
(உ)நட்பு - 79 ஆம் அதிகாரம்

## 04. சமய வாழ்வியல்

1.0 ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்
- 1.1 திருக்கோயில் அமைப்பு
- 1.2 திருக்கோயில் வழிபாடு
- 1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
- 1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2.0 வீட்டில் வழிபாடு
- 2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)
- 2.2 விசேட வழிபாடு
  - (அ) கூட்டு வழிபாடு
  - (ஆ) தியானம்
  - (இ) செபம்
- 2.3 அகப்புறத் தூய்மை

3.0 விரதங்களும் பண்டிகைகளும்
- 3.1 விரதங்கள்
  - (அ) சிவராத்திரி
    நவராத்திரி
    விநாயகர் சதுர்த்தி
    கந்தசஷ்டி
    விநாயகர் சஷ்டி
    திருவாதிரை
    பிரதோஷம்
    வைகுண்ட ஏகாதசி
  - (ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

- 3.2 பண்டிகைகள்

3.2.1 தைப்பொங்கல்
3.2.2 சித்திரை வருடப்பிறப்பு
3.2.3 ஆடிப்பிறப்பு
3.2.4 தீபாவளி
3.2.5 கார்த்திகை விளக்கு

4.0 அபரக் கிரியைகள்
4.1 பொது விளக்கீடு
4.2 மரணக் கிரியைகள்
4.3 சபிண்டீகரணம்
4.4 சிரார்த்தம்

5.0 சமய, ஆன்மீக விழுமியங்கள்
5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்.
5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6.0 சமய வாழ்வுடன் கலைகள்
இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலைகட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்.

எனது எண் : **5/3/4/02/2026**
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.
**2026.07.**

அறநெறி பாடசாலை அதிபர்களுக்கு,

## அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2026
## விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்துல்கள்

---

மேற்படி பரீட்சை தொடர்பாக **2026 ஜீலை மாதம் 24** ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவுள்ள அறிவித்தல் மீதான தங்களது கவனத்தை ஈர்ப்பதுடன், விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

02. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பாக அதன் இரண்டாம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள அது தொடர்பான அறிவுறுத்தல்களை மிகக் கவனமாக வாசித்து பூரணப்படுத்துவதுடன், விண்ணப்பப்படிவத்தில் அறநெறிப் பாடசாலை அதிபர்களது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்படல் வேண்டும்.

03. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு 2.1 இன் கீழுள்ள கூட்டில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். தலைப்பு 2.0 இன் கீழ் தங்கள் அறநெறிப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள ஆறு இலக்கங்களை உடையதான கணனி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். (இவ்விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கவரில் **“SCH NO”** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்விலக்கமாகும்.) அறநெறிப் பாடசாலை தொடர்பான விசாரணைகளுக்கு இக் கணினி இலக்கத்தைக் குறித்து வைத்துக் கொள்ளவும்.

04. வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்பட மாட்டாது. தங்களது வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள அறநெறிப் பாடசாலை மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் உங்களது பிரதேசத்தில் எவரேனும் வெளிவாரி பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் தரும்படி கேட்பின் அவரின் தகைமைகள் **2026 ஜீலை மாதம் 24** ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்புடையதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக் கட்டணத்தை அறவிட்டு தங்களது அறநெறிப் பாடசாலையினூடாக விண்ணப்பிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென்பதை விஷேடமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

05. முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மற்றும் அனைத்து வெளிவாரிப் பரீட்சார்த்திகளும் பரீட்சைக் கட்டணமாக **ரூபா 200.00** இனை செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழுத் தொகைக்குரிய கட்டணத்தை நாட்டின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளவும். முத்திரை அல்லது காசுக்கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தலாகாது.

06. தங்களது அறநெறி பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்ற உண்மையிலேயே ஆர்வமாகவுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது தங்களது முழுப்பெயர் மற்றும் ஏனைய விடயங்கள் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி உறுதிசெய்து கொண்டபின் விண்ணப்பப்படிவத்தில் தங்கள் கையொப்பத்தை இடுமாறும் விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

07. விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு மூலப் பிரதி, “பிரதிப் பரீட்சை ஆணையாளர், நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை.” எனும் முகவரிக்கு இத்துடன் அனுப்பப்பட்டுள்ள உறையினுள் இட்டு **2026 ஆகஸ்ட் மாதம் 24** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். இரண்டாம் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளவும். காலதாமதமான அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதால் சரியான முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பி குறித்த திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

08. முதல் முறையாக விண்ணப்பிக்கும் அறநெறிப் பாடசாலைகள் இந்து சமய விவகாரங்கள் திணைக்களத்தில் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் சான்றுபடுத்திய பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சுஜீவ விஜேரத்ன,
பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஒழுங்கமைப்பு)
பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்காக